1981 ஆகஸ்ட் 22]

போவதில்லை. அங்கே பக்கத்தில் இருப்பவர்களுக்குத்தான் கொடுக்கிறார்கள். புதிதாக மாடுகள் வாங்கப்படவும் இல்லை. தற்போது மேய்ச்சல் காடுகள் வெகு தூரத்தில் இருக்கின்றன. ஆற்றில் தண்ணீர் வந்துவிட்டால் மாடுகளின் பாதுகாப்புக்கு ஆபத்து ஏற்படுகிறது. ஆகவே, பக்கத்திலேயே மேய்ச்சலுக்கான நிலத்தை ஒதுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: துணைத் தலைவர் அவர்களே, முண்டந்துறை பகுதியில் 2,829 ஹெக்டேர் பரப்பளவுள்ள காடுகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. இப்போது அதிகமாக மாடுகளை வளர்க்கும் நிலையில் இருக்கிற இடத்தை எல்லாம் மாடுகள் மேய்வதற்கு ஏற்ற இடமாக மாற்றித் தரவேண்டுமென்ற கருத்தை இந்தியா முழுவதும் ஏற்றுக்கொள்ள முடியாத சூழ்நிலையில் இந்திய அரசாங்கம் கடுமையான தடைகளை விதித்திருக்கிறது. அது அவசியமான தடையும் கூட. ஆகவே, அப்படிப்பட்ட ஆலோசனைகளைப் பரிசீலிக்க இயலாது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நீர் ஊற்று இன்மை காரணமாகப் பயன்படுத்தப்படாமல் உள்ள கிணறுகள்.

* வினா எண். 9. திருமதி. தா. இராசாம்பாள்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மின் இணைப்புக் கொடுக்கப்பட்டுள்ள சுமார் 2·5 இலட்சம் பம்பு செட்டுகள், கிணறுகள், பாறையாகி அல்லது நீர் ஊற்று இன்றி இருப்பதால் பயன்படுத்தப்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) அந்தக் கிணறுகளுக்கு நீர் ஊற்றுப் பெருகவும் பம்பு செட்டுகளை இயக்குவதற்கும் வசதியாக நீர் கசிவுக்குட்டைகள் மற்றும் துணை ஏரிகள் கட்டுவதற்கு ஒரு வரைவுத் திட்டத்தை (Crash Programme) அமுல்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: (அ) மின் இணைப்புப் பெற்ற கிணறுகள் பாறையாகி அல்லது நீர் ஊற்று இன்றி இருப்பதால் பயன்படுத்தப்படாமல் உள்ள கிணறுகளின் புள்ளி விவரம் வேளாண்மைப் பொறியியல் துறையில் பராமரிக்கப்படவில்லை.

(ஆ) (1) தர்மபுரி மாவட்டத்தில், வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 1981–82 ஆம் ஆண்டில் முப்பது நீர் கசிவுக் குட்டைகள் தர்மபுரி வளர்ச்சிக் கழகத் தலைவரால் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் ஏற்கனவே

மேற்கொள்ளப்பட்ட 22 நீர் கசிவுக் குட்டைகள் இவ்வாண்டில் பூர்த்தி செய்யவும் அவரால் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக இரண்டு உப கோட்டங்கள் பிரத்தியேகமாகச் செயல்படுகின்றன.

(2) மண்வளப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுத்த பகுதிகளில் கசிவு நீர்க் குட்டைகள் கட்டப்பட்டு வருகின்றன. 1980–81 ஆம் ஆண்டு வரை 1,228 நீர் கசிவுக் குட்டைகள் பெரும்பாலும் இராமநாதபுரம் மற்றும் தருமபுரி மாவட்டங்களில் கட்டப்பட்டுள்ளன.

(3) இவை தவிர ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் மாவட்ட ஆட்சியர் அவர்களால் பண ஒதுக்கீடு செய்யப்பட்டு நீர்க்கசிவுக் குட்டைகள் கட்டப்படுகின்றன.

திருமதி. தா. இராசாம்பாள்: வறட்சி நிவாரணத்தின்கீழ் தற்போது கசிவு நீர்க் குட்டைகள், துணை ஏரிகள் அமைக்கப்படுவது போல் கிராஷ் புரோகிராம் திட்டத்தின்கீழ் வரைவு திட்டம் ஒன்று தயாரித்து ஆண்டுதோறும் நிதி ஒதுக்கீடு செய்து ரெகுலராக அந்தத் திட்டத்தை எடுத்துச் செய்ய அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: அப்படிப்பட்ட திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. என். வரதராஜன்: ஏற்கனவே பல லட்சக் கணக்கான ரூபாய் செலவு செய்து சமுதாயக் கிணறுகள் என்று உருவாக்கி இருக்கிறோம். பம்ப் செட்டுகள் இருக்கின்றன. நடைமுறையில் விவசாய அபிவிருத்திக்கு அப்படிப்பட்ட கிணறுகளை உபயோகப்படுத்த வேளாண்மைத் துறை முன்வருமா ?

மாண்புமிகு திரு. காளிமுத்து: அதைப் பற்றிப் பரிசீலிக்கலாம்.

திருமதி. தா. இராசாம்பாள்: துணைத் தலைவர் அவர்களே, தற்போது வறட்சியின் காரணமாக விவசாயிகளின் கிணறுகள் அனைத்தும் வறண்டுபோய் மிகவும் மோசமான நிலையில் விவசாயம் செய்வதற்கு இடமில்லாமல் இருக்கிறது. இதைக் கருத்தில் கொண்டு இந்த அரசு தொடர்ந்து கிராஷ் புரோகிராம் என்ற திட்டத்தை எடுத்து அங்கே கசிவு நீர்க் குட்டைகளையும் துணை ஏரிகளையும் அமைத்து விவசாயிகளுக்குத் துணையாக இருக்க அரசு முன்வருமா என்பதை மீண்டும் கேட்டு அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: அதற்காகத்தான் வறட்சியையொட்டி போடப்பட்ட திட்டம், மண் வளப் பாதுகாப்புத் திட்டம், ஒருங்கிணைந்த கிராமப்புற வளர்ச்சித் திட்டம், போன்றவைகளில் அத்தகைய திட்டங்கள் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

1981 ஆகஸ்ட் 22]

திரு. பெ. சு. திருவேங்கடம் : தமிழகத்திலே மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதுபோல் ஏராளமான விவசாயிகளின் கிணறுகளிலே தண்ணீர் இல்லாமல் அந்தக் குடும்பங்கள் எல்லாம் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அப்படிப்பட்ட தண்ணீர் வறண்டிருக்கின்ற, பாறையாக இருக்கின்ற கிணறுகளை ஆழப்படுத்தியாவது அந்தக் குடும்பங்களை வாழ வைக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : பொதுவாக அப்படிப்பட்ட திட்டத்தை ஏற்படுத்த இயலாது. ஆனால் குறிப்பிட்ட சில பகுதிகளை மாண்புமிகு உறுப்பினர்கள் அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்தால் அதைப் பரிசீலிக்கலாம்.

திருமதி. தா. இராசம்மாள் : வறட்சிப் பணிகள் 30–9–1981 உடன் முடிவடைய வேண்டும் என்று அரசு உத்திரவிட்டுள்ளது என்று தெரிகிறது. வறட்சி நீடித்து இருப்பதால் 31–12–1981 வரையில் அதை நீடிக்கவும் நிதி ஒதுக்கீடு இல்லை என்ற நிலைமை இருப்பதால் போதுமான நிதியை ஒதுக்கியும் வறட்சி இருக்கிற வரையில் நிவாரணம் அளிக்கவும் வேலைவாய்ப்பு அளிக்கவும் அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : இது மூலக் கேள்விக்குத் தொடர்பு அற்றது.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : துணைத் தலைவர் அவர்களே, நீர்வசதியற்ற கிணறுகளுக்கு தூரத்திலிருந்து மேக்னடிக் பவர் மூலமாக நீர் கொண்டுவரமுடியுமென்று ஹைதராபாத்திலே உள்ள ஜியோபிசிஸ்ட்ஸ் நிறுவனம் கண்டுபிடித்திருக்கிறதே, அது தமிழக அரசின் வேளாண்மைத் துறையினால் பரிசோதித்துப் பார்க்கப்பட்டதா ? இல்லையென்றால் அரசு அதைப்பற்றிப் பரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தனிக் கேள்வி போடவேண்டும்.

விவசாய நலக்குழு அமைக்கும் திட்டம்.

* வினா எண். 10 திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக அரசின் சார்பில் ‘‘ விவசாய நலக்குழு ’’ அமைக்க அரசு உத்தேசித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரமென்ன ?

(இ) எப்பொழுது முதல் குழு செயல்படும் ?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS